**ஐக்கிய அமெரிக்கத் தூதுவராலயம்**
**கொழும்பு**

# ஊடக வெளியீடு

பொது அலுவல்கள் பிரிவு

தொலைபேசி: +94(1) 249-8100 ● தொலைநகல்: +94 (1) 244-9070
மின்னஞ்சல்: TealCL@state.gov ● http://srilanka.usembassy.gov

வெளியீட்டு இல. 20120320

## Biz+ திட்டத்திற்கமைய உள்நாட்டு வியாபாரிகளுடன் ஐக்கிய அமெரிக்க தூதுவராலயம் கைகோர்க்கின்றது

***20 மார்ச்; 2012:*** ஐக்கிய அமெரிக்க தூதுவராலயத்தின் அபிவிருத்திக் கரமான ஐக்கிய அமெரிக்க சர்வதேச அபிவிருத்தி முகவராண்மையானது (USAID) வெள்ளிக்கிழமையன்று அதன் Biz+ திட்டத்தின் கீழ் முதலாவது நிதியுதவியை வழங்கியது. மீட்சிபெறுகின்ற பகுதிகளில் உள்நாட்டு வியாபாரங்களுக்கும், அதிகரித்துவரும் பொருளாதார வளர்ச்சிக்கும், மற்றும் தொழில் உருவாக்கப்படுவதற்கும் ஆதரவளிக்கின்றது. சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வியாபாரங்களுக்கு தொழில்நுட்ப மற்றும் நிருவாகரீதியிலான உதவியுடன் சேர்த்து மானியங்களை இத்திட்டம் வழங்குகின்றது. கொழும்புக்கும்,ஏனைய பகுதிகளுக்கும் மீன்களை உடன் ஏற்றிஇறக்கும் மீனவர்களிடமிருந்தும், வர்த்தகர்களிடமிருந்தும் வளர்ச்சியுறும் கோரிக்கைகளை நிறைவேற்றுவதில், நாளொன்றுக்கு 6 தொன்களிலிருந்து 26 தொன்கள் வரையில் அதன் பனிக்கட்டி(ஐஸ்) உற்பத்தியை அதிகரிப்பதற்கு ஜயந்தவின் கற்கோவளம் பனிக்கட்டி தொழிற்சாலைக்கு இந்த அமெரிக்க டொலர் $.275,000 நிதியுதவி துணையாக அமையும்.

'USAIDஇன் பிந்திய முன்னெடுப்பானது தசாப்த காலங்களைக்கொண்ட மோதலின் பின் தொழில்களை Biz+ உருவாக்குகின்றது. பிராந்தியத்தின் பனிக்கட்டிக்கான கோரிக்கையை நிறைவேற்றுவதன் மூலம் மீனவர்களினதும், மீன் வர்த்தகர்களினதும் வருமானங்களை இந்த நிதியுதவி அதிகரிக்கும் என்பதுடன், போக்குவரத்தில் ஈடுபடுபவர்கள் போன்ற பெறுமதிச் சங்கிலியின் நெடுகிலும் ஏனையோருக்கு நன்மையளிக்கும்” என USAID மிஷன் பணிப்பாளர் ஜிம் பெட்னர்(Jim Bednar) தெரிவித்தார். “அபாய வாய்ப்பை எதிர்நோக்கும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கும், பிராந்தியத்தின் பொருளாதார வளர்ச்சியைத் தூண்டுவதற்கும் உதவுவதே Biz+ இன் இறுதியான குறிக்கோளாகும்.’’

புதிய மத்திய வசதியொன்றில் சூழல்ரீதியில் நட்புறவிலான குளிரூட்டலின் கொள்வனவுக்கும், நிறுவுகைக்கும் மான்யம் உதவுவதுடன், உள்ளகமயப்படுத்தப்பட்ட குளிரூட்டல் மற்றும் பனிக்கட்டி பங்கீட்டு நிலையங்களுக்கு ஆதரவளிக்கும். நிறுவனத்தின் செயற்பாடுகளின் வடிவமைப்பை மேம்படுத்துவதற்கும், பயன்படுத்தப்பட்ட குளிர்நீரின் ஆகுசெலவுகளைக் குறைப்பதற்காக உதவுவதற்கும் தொழில்நுட்ப உதவியையும் Biz+ வழங்கும்.

ஆசிய பணியகத்திற்கான USAIDஇன் வருகைதரும் சிரேஷ்ட பிரதி உதவி நிருவாக அதிகாரி டெனிஸ் ரோலின்ஸினால்(Denise Rollins) யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த பருத்தித்துறையில் ஜயந்தவின் கைத்தொழில் பேட்டைக்கான நிதியுதவிக்கான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. USAID ஆதரவிலான செயற்பாடுகள் மீதான முன்னேற்றத்தை அவதானிப்பதற்கு இலங்கைக்கான மூன்று நாள் விஜயத்தின் அங்கமாகவே டெனிஸ் ரோலன்ஸின் இந்த நிதியுதவி வழங்கப்பட்டது

*அண்ணளவாக 50 வருடகாலமாக உலகம்பூராவும் உள்ள அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் அபிவிருத்தி மற்றும் மனிதாபிமான உதவியை ஐக்கிய அமெரிக்க சர்வதேச அபிவிருத்தி முகவராண்மை (USAID) ஊடாக அமெரிக்க மக்கள் வழங்கியுள்ளார்கள். 1956 முதல், இலங்கையின் சகல மக்களும் நன்மையடைவதற்காக அமெரிக்க டொலர் $2 பில்லியனுக்கு மேற்பட்ட தொகையை ஐக்கிய அமெரிக்க அரசாங்கம் மூலதனமிட்டுள்ளது.*